பக்கங்கள் 4 விலை: ரூபா 2-00

University of Jaffna ... RECEIVED 1989-10-22 Periodicals ... Library



# விடுதலை

இதழ்: 14 சனிக்கிழமை 21-10-1989



## சிறைக் கைதி ஒருவர் கிராமசேவையாளராகிருர்!

தென்பகுதியில் சிறைக்கைதியொருவருக்கு புதிதாக கிராம சேவையாளர் பதவி வழங்கப்பட்டுள்ளது. மித்தெனிய உதவி அரசாங்க அதிபர் பிரிவிலேயே இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நபருக்கு ஏழுவருட கால சிறைத்தண்டனை நீதிமன்றத்திஞல் வழங்கப்பட்டிருந்தது இப்புதிய நியமனம் அப்பகுதி மக்களிடையே பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளதாம்

அரசியல் செல்வாக்கு ஒன்றிஞலேயே இந்தச்சிறைக் கைதி கிராம சேவை அலுவலராகும் அதிஷ்டத்தைப் பெற்றுக் கொண்டாராம்.

அம்பாறையிலிருந்து முதற்கட்ட

# அமைதிப்படை வெளியேறியது!

## ஸ்ரீலங்கா விசேட அதிரடிப்படைப் பிரிவினரும் வெளியேற்றம்

(நமது விசேட நிருபர்)

அம்பாறை மாவட்டத்திலிருந்து விலக்கிக்கொள்ளப்பட்ட இந்திய அமைதிப்படையின் ஒரு பிரிவு நேற்றுத் திருகோணமலை துறைமுகத்திலிருந்து தாயகம் புறப்பட்டது

எம். பி அக்பர் என்ற இந்திய ராணுவக் கப்பலில் நாடு திரும்பிய இப்படைப் பிரிவினரை திருகோணமலைப் பிரிவு அமைதிப் படைத் தளபதி மேஜர் ஜெனரல் எம். ஜே. கபூர் வழியனுப்பி வைத்தார் மற்றுமொரு படைப்பிரிவு திருகோணமலையிலிருந்து இம்மாதம் புறப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேசமயம். அம்பாறை மாவட்டத்திலிருந்து சுமார் 60 பேர் அடங்கிய இரு பிரிவுகளைக் கொண்ட சிறிலங்கா அரசின் விசேட அதிரடிப் படையினரும் வாபஸ் பெறுவர் என்று வெளிவிவகார. பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரத்ன தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னதாக அமைதிப் படை வெளியேறுவதாக இருந்தால் அதற்கு முன்னர் சிறீலங்கா அதிரடிப் படை

(4ம் பக்கம் பார்க்க)

## நரசிம்மராவ் - விஜயதுங்க பேச்சுவார்த்தை!

(கோலாலம்பூர்)

இந்திய வெளியுறவு அமைச்சர் திரு பி வி. நரசிம்ராவும் இலங்கைப் பிரதமர் திரு. ரி பி. விஜயதுங்காவும் கோலாலம்பூரில் சந்தித்து 45 நிமிட நேரம் பேச்சுவார்த்தை நடத்திஞர்கள்.

இந்தியாவுக்கும், இலங்கைக்குமிடையே கடந்த மாதம் 18ம் திகதி கையெழுத்தான கூட்டறிக்கையிலுள்ள விதி முறைகளின் அமுலாக்கல் பற்றியும், பரஸ்பரம் அக்கறையுள்ள விடயங்கள் குறித்தும் பெரும்பாலும் ஆலோசிக்கப்பட்டன

நவம்பர் 7ல் சமர்ப்பிக்கப்படும்

## 4284கோடி ரூபா பட்ஜட்டில் துண்டுவிழுகிறது பொருட்களின் விலை மேலும் அதிகரிக்கும்?

(கொழும்பு)

மத்திய அரசாங்கத்தின் 1990ம் ஆண்டுக்குரிய இரண்டாவது வரவு செலவுதிட்டத்தில் துண்டுவிழும் தொகை 4284 கோடி ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது

இந்த வரவுசெலவுத்திட்ட மதிப்பீட்டின்படி அரசின் மொத்த செலவீனம் 103.043 மில்லியன் ரூபாவாகும். மொத்த வருமானம் 60.200 மிலியன் ரூபாவாகும். இதன்படி 42.843 மில்லியன் ரூபா இந்த வரவுசெலவுத்திட்ட மதிப்பீட்டில் துண்டுவிழுகின்றது.

இத்துண்டுவிழும் தொகையைச் சமாளிப்பதற்காக சில பொருட்களின் விலைகளை அதிகரிக்கவும், வெளிநாட்டு உதவிகளைப் பயன்படுத்தவும் நிதியமைச்சு ஆலோசித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

1990ஆம் ஆண்டுக்குரிய வரவு-செலவுதிட்டம் நவம்பர் மாதம் ஏழாம் திகதி பிரதமரும் நிதியமைச்சருமான திரு. டி. பி. விஜயதுங்காவினுல் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது

## எழுத்தாளர்கள் கலைஞர்கள் ஊக்குவிப்பு

(திருகோணமலை)

ஈழத்தமிழ் எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்களுக்கான ஊக்குவிப்பு நடவடிக்கைகளை வடக்கு கிழக்கு மாகாண அரசு மேற்கொள்ளவேண்டும் என்னும் தீர்மானத்தை மாகாண சபை நிறைவேற்றி, அதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(4ம் பக்கம் பார்க்க)

## இன்று 2ம் ஆண்டு நினைவாக விசேடபூசை அன்னதானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனு வைத்தியசாலையில் மரணித்தவர்களின் இரண்டாவது ஆண்டு நினைவாக இன்று விசேடபூசையும், அன்னதானமும் நடைபெறும்.

சென்ற வருடம் அக்டோபர் மாதம் 21 ந்திகதி யாழ். வைத்தியசாலையில் மரணமான 21 ஊழியர்களின் இரண்டாவது ஆண்டு நினைவாக வைத்தியசாலை ஞானவைரவர் ஆலயத்தில் விசேட பூசை நடைபெறும். நண்பகல் அன்னதானம் வழங்கப்படும்.

இந்த மரணமானவர்களின் ஞாபகார்த்தமாக வெளி

(4ம் பக்கம் பார்க்க)

## இன்று நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

மீளக்குடியமர்த்தல் நிவாரணம் ஆயிரம் ரூபா இன்று பின்வரும் பகுதிகளுக்கு ஆஸ்பத்திரிவீதி இலங்கைவங்கிக் கிளையில் வைத்து வழங்கப்படும்.

புத்தூர் மேற்கு கிராம சேவையாளர் பிரிவு - 836 குடும்பங்கள், வாதரவத்தை 171 - குடும்பங்கள், புத்தூர் கிழக்கு - 572 குடும்பங்கள்.

## 'சமாதானக் குழுக் கூட்டம் பின்போடப்பட்டது ஏன்'?

(கொழும்பு)

- யோகசங்கரி

''வடக்கு கிழக்கு மாகாணத்தில் அமைதியைக் குழப்புபவர்கள் பங்கு பற்ருதபடியால் சமாதானக்குழுக் கூட்டத்தைப் பின்போட்டிருப்பீர்களேயாயின் தெற்கில் அமைதியைக் குழப்பும்ஜனதா விமுத்தி பெரமுன இயக்கம் பங்குபற்ருத சர்வகட்சி மகாநாட்டையும் பின்போட்டிருக்கவேண்டும்.''

நேற்றுப் பாராளுமன்றத்தில் அவசரகாலச்சட்ட விவாதத்தின்போது ஈ. பி. ஆர். எல். எப். பாராளுமன்றக்குழு உறுப்பினரான திரு. வி கே. யோகசங்கரி பேசும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், ''இந்த நாட்டில் அமைதியையும் சமாதானத்தையும் உருவாக்கவேண்டுமென்று நாம் விரும்புகின்ரேம். இதற்கு ஓர் முன்னேடியாகவே வடக்கு கிழக்கு மாகாணங்களில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு ஓர் சமாதானக்குழுக் கூட்டம் கடந்த 9-ந் திகதி நடைபெறவிருந்தது

எதிர்பாராத விதமாக வானெலி மூலம் இக்கூட்டம் பின்போடப்பட்ட செய்தி அறிவிக்கப்பட்டது பின்போடப்பட்டமைக்கு பிரதான காரணம் இக்கூட்டத்தில் கலந்து கொள்ள இருந்த ஒரு குழுவும், ஒரு கட்சியும்

(4ம் பக்கம் பார்க்க)

பாராளுமன்றத்தில் ஸ்ரீமாவோ பேச்சு

## கொலைகள், வன்முறைகளால் பிரச்சினைகளுக்கு தீர்வில்லை

(கொழும்பு)

தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்கும் நோக்கம் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கு இல்லை என்று எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நேற்று பாராளுமன்றத்தில் கூறிஞர்.

அவசரகாலச்சட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றிய அவர் தமது கட்சி நாட்டில் அமைதியை மீண்டும் ஏற்படுத்தும் நோக்கத்திற்காகவே சர்வகட்சி மகாநாட்டில் சுதந்திரக்கட்சி கலந்துகொண்டதாகவும் அவர் கூறிஞர்.

(4ம் பக்கம் பார்க்க)

பல்கலைக்கழக மாணவர்

## தெரிவுப்பட்டியல் விரைவில் வெளியாகும்

[யாழ்ப்பாணம்]

பல்கலைக்கழகங்களுக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகள் அடுத்த சில வாரங்களில் மேற்கொள்ளப்படவுள்ளன.

1988 ஆகஸ்ட்டில் நடந்த கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையில் குறிப்பிட்ட புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்தவர்களிலிருந்து பட்டப்படிப்பைத் தொடர்வதற்குரிய இந்த மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

தெரிவுப்பட்டியல் வெளியாவதற்கு முன்னர் 'கட்ட

(3ம் பக்கம் பார்க்க)

## நெதர்லாந்து உதவியுடன் மன்னருக்கு குடிநீர் விநியோகம்!

(மன்ஞர்)

மன்ஞர் மாவட்டத்தில் நிலவிவந்த குடிநீர்பிரச்சினையை தீர்க்க நெதர்லாந்து அரசின் உதவியுடன் பாரிய திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த ... இவ்வேலைத் திட்டங்கள் கவனிப்பாரற்ற நிலையிலேயே இருந்தது.

மன்ஞர் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு. அ. இமானுவேலின் அயராத உழைப்பால் நன்னீர்வழங்கும் திட்டங்கள் துரிதவேகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதும் மன்ஞர் பட்டினத்திற்கும், வங்காலைக்கும் நீர் விநியோகம் செய்யப்படுமென தெரியவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியருக்கு கடிதம்

### களவு பிடிபட்டது

ஐயா,

18-10-89 வெள்ளாந்தெருவில் உள்ள யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை இல. 7ல் ஜனசக்திப் பொருட்கள் வழங்கியபோது 12 கிலோ அரிசிக்குப் பதிலாக 11 கிலோ அரிசியும், 3 கிலோ சீனிக்குப் பதிலாக 2 கிலோ 800 கிறு மும் வழங்கப்பட்டது. இதனை ஜனசக்தித்திட்ட முகவர் கையுமெய்யுமாகப் பிடித்துவிட்டார். கிளையில் நடைபெறும் மோசடிக்கு நிர்வாகசபையினரும் உடந்தையோ? என மக்கள் சந்தேகிக்கின்றனர்.

இங்ஙனம்

யாழ்ப்பாணம். திருமதி சிவகங்கை துரைராசா

### குடிநீர் வீண் விரயமாகிறது

ஐயா,

யாழ்ப்பாண மாநகர வீதிகளில் உள்ள பல நீர் வழங்கும் பைப்புகள் பழுதடைந்து இருப்பதால் அவற்றிலிருந்து குடிநீர் வீணாக விரயமாகிறது. அருகில் சேறும், சகதியும் ஏற்படுகிறது. அவற்றைத் திருத்தினால் என்ன என மாநகர சபை அதிகாரியிடம் கேட்டேன். அதற்கு அவர் போதிய (ராப்) பைப்புகள், நிதி உதவி இல்லை என்கிறார். அப்படியானால் இவை இதே நிலைமைதானா? எப்பொழுதுதான் நமது நகரம் சுத்தமாக மாறுமோ? பல இடங்களில் குடிநீரின்றி மக்கள் அலைய இங்கே நீர் வீணாக அலைகிறது இதேபோல நகரில் சில இடங்களில் பகலிலும் மின் விளக்குகள் எரிகின்றன.

திருநெல்வேலி. வ. காசித்தம்பி

## பாடத்திட்டத்தை பூர்த்தியாக்க விசேட ஏற்பாடு; பாடத் திட்டங்களில் தேவையற்ற பகுதி நீக்கப்படும்

(கொழும்பு)

பாடசாலைகளில் பாடத்திட்டங்களை விரைவில் பூர்த்தியாக்குவதற்கான விசேட திட்டமொன்றை அமுல்படுத்த கல்வி அமைச்சு ஆலோசித்து வருகின்றது.

ஒவ்வொரு பாடத்திலும் முக்கிய பகுதிகளை அவதானித்து அடிப்படை அமைப்புக்கு ஏற்ப பாடத்திட்டங்களை வகுத்துக் கொள்வதற்கு இத் திட்டத்தின்படி ஆசிரியர்களுக்கு அனுமதி வழங்கப்படும்.

இதன்படி தாம் படிப்பிக்காதுவிடும் பகுதிகளையும், அவசியமில்லையென்ற பகுதிகளையும் ஆசிரியர்கள் குறிப்பிட வேண்டும். கல்வி நிபுணர்கள் ஆராய்ந்து பின்னர் முடிவு எடுப்பார்கள்.

தென் பகுதி நிலைவரம் காரணமாக கடந்த காலங்களில் வழமைக்கு மாறாக அதிகநாட்கள் பாடசாலைகள் இயங்காதமையால் ஏற்பட்டுள்ள நிலைமையைச் சமாளிக்கவே இந்த விசேட திட்டத்தை அமுல்படுத்த ஆலோசிக்கப்பட்டு வருகின்றது.

## பாலர் பாடசாலை ஆசிரியரை நிரந்தரமாக்க முயற்சி!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள பாலர் பாடசாலை ஆசிரியர்களை நிரந்தரமாக்குவதற்கு முயற்சியெடுக்கப்பட்டுவருகின்றது.

சனசமூக நிலையங்களினாலும் உள்ளூராட்சி மன்றங்களினாலும் நடாத்தப்பட்டுவரும் பாலர் பாடசாலைகளில் இந்த ஆசிரியர்கள் தற்பொழுது கடமை புரிந்து வருகின்றனர்.

இப்பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு விரைவில் இடம்பெறவுள்ள மாகாண அரசின் ஆசிரியர்தெரிவின் போது நிரந்தர நியமனம் வழங்கி உதவுமாறு யாழ். பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு.சு. டிவகலாலா மாகாண கல்வி அமைச்சு செயலாளரைக் கோரியுள்ளார்.

யாழ் மாவட்டத்தில் உள்ளூராட்சி மற்றும் சனசமூக நிலையங்களினால் நடாத்தப்படும் பாலர் பாடசாலைகளில் பல விசேட தகைமை பெற்ற ஆசிரியர்கள் கடமையாற்றி வருகின்றமை பற்றியும் உதவி ஆணையாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

### அமைதிப்படை விலகல் இணைப்புக் குழு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மகாணங்களிலிருந்து இந்திய அமைதிப் படை விலகல் தொடர்பாக இணைப்புக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

வெளி விவகார பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் திரு. ரஞ்சன் விஜயரத்ன, வடக்கு கிழக்கு மாகாண முதல்வர் திரு. அ. வரதராஜப்பெருமாள், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சேபால ஆட்டிகல, இந்திய அமைதி காக்கும் படைத் தளபதி ஜெனரல் கல்கட் ஆகியோர் இக்குழுவில் இடம்பெறுகிறார்கள்.

### பால் வழங்குவது நிறுத்தப்பட்டது

(பருத்தித்துறை)

மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு வழங்கப்பட்டுவந்த பால் கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக நிறுத்தப்பட்டுள்ளது.

சுகாதாரத் திணைக்களம் இதற்கு வழங்கியபால் மாவை இந்த ஒரு வருடமாக நிறுத்தி வைத்ததாலேயே நோயாளிகளுக்கு பால் கிடைப்பதில்லை என ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன,

### ஆசிரிய ஆலோசகர் தெரிவாவர்

(கொழும்பு)

சமய பாட ஆசிரிய ஆலோசகர்களை தெரிவு செய்வதற்கு கல்வி அமைச்சின் சமய கலாசாரப்பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்து சமயம், றோமன் கத்தோலிக்கம், கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய சமயபாட ஆசிரியர்களிலிருந்து இத்த ஆசிரிய சேவைக்காலப் பயிற்சி ஆலோசகர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர்

### திருமலையில் கற்பகம்

(திருகோணமலை)

பனம்பொருள் அபிவிருத்தி சபையின் 'கற்பகம்' விற்பனை நிலையம் திருகோணமலையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது

மாகாண கைத்தொழில் போக்குவரத்து அமைச்சர் ஜனாப் எம். கே. அபூயூசுப் இதனை சம்பிரதாய பூர்வமாக திறந்து வைத்தார் பனம்பொருள் அபிவிருத்திச் சபையின் தலைவர் திரு கே. நடராசாவும் இவ்வைபவத்தில் கலந்துகொண்டார்.

### தொண்டமான் குற்றச்சாட்டு ஈரோஸ் மறுப்பு!

(யாழ்ப்பாணம்)

மலையகத்தில்வாழும் தோட்டத் தொழிலாளர்களை 'ஈரோஸ்' இயக்கம் பயமுறுத்தி தமது காரியங்களைச் சாதிக்க முயல்கிறது என இலங்கை தோட்டத்தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. தொண்டமான் குற்றம் சாட்டியுள்ளார். இதனை 'ஈரோஸ்' மறுத்துள்ளது.

இதுதொடர்பாக ஈரோஸ் பாராளுமன்ற உறுப்பினர் திரு ரட்ணராஜா, நமது இயக்கம் மலையக மக்களுக்கு தொண்டுசெய்கிறதே தவிர வேறு எதனையும் செய்யவில்லை திரு. தொண்டமான் கற்பனையில் இதனைக்கூறி யுள்ளார் எனத் தெரிவித்துள்ளார்.

### பாடசாலை சுவர் மறைவு அதிபரிடம் முறையீடு!

(வட்டுக்கோட்டை)

பாடசாலை மதில் சுவரொன்று திடீரெனக் காணாமல் போய் விட்டதாம். இச்சம்பவம் சித்தன்கேணியில் நடைபெற்றதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

சித்தன்கேணி பண்டத்தரிப்பு வீதியில் உள்ள கணேச வித்தியாலயத்தின் சுவரே மர்மமாக மறைந்து விட்டதாம்.

ஐந்தடி உயரத்திற்குக் கட்டப்பட்டிருந்த இப்பாடசாலையின் மேற்கு எல்லை மதிலில் உள்ள கொங்கிரீட் கற்கள் இனம் தெரியாதோரால் அகற்றப்பட்டு தற்பொழுது அங்கு அத்திவாரம் மட்டுமே எஞ்சியுள்ளதாம்.

இந்த விசித்திர திருட்டுச் சம்பவம் பற்றி மேற்படி பாடசாலையின் அதிபர் பண்டத்தரிப்பு கொத்தணி அதிபருக்குப் புகார் செய்துள்ளார்.

## யாழ். மாவட்டத்தில் 2000 ஆசிரியர்களில் 170பேரே அதிர்ஷ்டசாலிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் நூற்றியெழுபது ஆசிரியர்களுக்கு இரண்டுவருட சம்பள முற்பணக்கடன் முதலில் வழங்கப்படவுள்ளது

ஒவ்வொரு கோட்டக் கல்விப் பிரிவிலும் இந்த சம்பள முற்பணக் கடனைப்பெற விண்ணப்பித்திருந்தோரில் தகுதியானவர்களைத் தெரிவு செய்யும் வேலைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது இந்த தெரிவுப் பட்டியல் யாழ். கல்வித் திணைக்களத்திற்குக் கிடைக்கப் பெற்றதும் சம்பள முற்பணக் கடனை வழங்கும் வேலைகள் ஆரம்பமாகுமென கல்வித் திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் இந்த இரண்டுவருட சம்பள முற்பணக் கடனைப் பெற சுமார் இரண்டாயிரம் ஆசிரியர்கள் விண்ணப்பித்துள்ளமை தெரிந்ததே

## ப. நோ. கூ. சங்கங்களில் சீமெந்து விலை 125 ரூபா

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறையில் உற்பத்தியாகும் சீமெந்து, பல நோக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலமாக 125 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகிறது.

காங்கேசன் சீமெந்து வடக்கு, கிழக்கு பகுதிகளிலேயே விற்பனை செய்யப்படுமென அரசாங்கம் அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தாம்பெற்றுக் கொள்ளும் சீமெந்தை தமது பகுதி பாவனையாளர்களுக்கு விற்பனை செய்துவருகின்றன.

ஏற்னவே தமது பெயர்களைப் பதிவு செய்துகொள்பவர்களுக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் சீமெந்தை வழங்கி வருகின்றன.

ஆயினும் சில பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் உயர்மட்டத்தினர் சிலர் சிமெந்தை தமக்கு தேவையானவர்களுக்கு விற்பனை செய்துவிட்டு பொதுமக்களுக்கு சிமெந்து முடிந்துவிட்டது என்று கூறிவருகின்றனராம்.

உயர்மட்டத்தினர் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் சிமெந்து கூடுதல் விலைக்கு விற்பனை செய்யப்படுகிறதாம்.

மிகவிரைவில் சிமெந்து தாராளமாகக் கிடைக்கும் என சிமெந்து தொழிற்சாலை உயர்பீடத்தினர் தெரிவிக்கின்றனர்.

## தேசிய தொழிற் பயிற்சிக்கு விண்ணப்பங்கள் அனுப்பலாம்

(யாழ்ப்பாணம்)

தேசிய தொழிற்பயிற்சித் திட்டத்தில் தொழில் பயில்வோருக்கான வயதெல்லை முப்பதாக அதிகரிக்கப்பட்டுள்ளது முன்பு 25 வயதுக்குட்பட்டவர்களே இப்பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்

யாழ். மாவட்டத்தில் இப்பயிற்சியில் சேரவிரும்புபவர்கள், இல6, மாகாத்மா காந்தி வீதி, யாழ்ப்பாணம் என்றமுகவரியில் யாழ் மாவட்டப்பாராளுமன்ற உறுப்பினர்களான திரு கே. பிரேமச்சந்திரன், திரு. வீ. யோகசங்கரி ஆகியோரின் காரியாலயங்களில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மோட்டார், றேடியோ, தையல் இயந்திர பொறியியல் உட்பட முப்பது தொழில்களில் இப்பயிற்சி அளிக்கப்படும். பயிற்சிக் காலத்தில் மாதம் 450 ரூபா வழங்கப்படும். இத்துடன் போக்குவரத்துச்சபை பஸ்களில் சலுகைக் கட்டண அடிப்படையில் பருவகாலச் சீட்டும் வழங்கப்படும். எட்டாம் வகுப்பு முதல் மேல்வகுப்பு வரை படித்தவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

16 வயதுக்கு மேற்பட்ட ஆண் பெண் இருபாலாரும் இப்பயிற்சியில் சேரலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## இப்படியொரு சாதனை பாதுகாப்பற்ற ரயில் கடவை இங்குதான் உண்டு

(யாழ்ப்பாணம்)

இலங்கையிலேயே பாதுகாப்பற்ற ரயில் கடவைகளைக் கொண்டுள்ள பகுதி என்ற 'பெருமையை' யாழ் மாவட்டம் தற்பொழுது பெற்றுள்ளது.

தற்போது யாழ். தேவி ரயில் சேவையும் மற்றும் சரக்கு ரயில் சேவைகளும் காங்கேசன்துறை வரை நடாத்தப்பட்டு வருகின்றன.

எனினும் யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேசன்துறை வரையிலான பல ரயில் கடவைகளுக்கு பாதுகாப்பு காவலாளிகள் இதுவரை நியமிக்கப்படவில்லை.

இலங்கையில் சகல ரயில் கடவைகளுக்கும் மூங்கில் கதவுகளை அமைத்து அதற்கான காவலாளிகளும் கடந்த டிசம்பர் மாதம் நியமிக்கப்பட்டிருந்தனர்.

அந்தச் சமயத்தில் யாழ்ப்பாணத்திற்கு அப்பால் ரயில் சேவை நடைபெறாததினாலேயே இன்று இந்தநிலை ஏற்பட்டுள்ளதாகவும் சொல்லப்படுகிறது.

## திருகோணமலைக்கும்யாழ்ப்பாணத்துக்கும் 190 புதிய தொலைபேசிகள் அடுத்த வாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் – திருகோணமலை மாவட்டங்களுக்கு 190 புதிய தொலைத்தொடர்பு இணைப்புகள் விரைவில் வழங்கப்படும் இதற்கான வேலைகள் அடுத்த வாரம் ஆரம்பமாகும்.

யாழ்ப்பாணத்துக்கு 90 புதிய இணைப்புக்களும், திருகோணமலைக்கு 90 இணைப்புகளும் வழங்குவதற்காக வடக்கு, கிழக்கு மாகாண புனர்வாழ்வு அமைச்சு 30 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

ஜடா உதவித் திட்டத்தின் கீழ் இந்நிதி வழங்கப்படுகிறது. யாழ்ப்பாணம் திருகோணமலை தொலைத்தொடர்பு புனரமைப்பு வேலைகளுக்காக 'பி ஏ பி. எக்ஸ் கருவிகள் ஏற்கனவே இம்மாவட்டங்களுக்கு எடுத்து வரப்பட்டுவிட்டது. என வடக்கு, கிழக்கு மாகாண அரசின் தொலைத் தொடர்பு பணிப்பாளர் திரு. எஸ். கனகசூரியர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுடன் ஆயுத குறைப்பு பாகிஸ்தான் பிரதமர் முயற்சி

(கோலாலம்பூர்)

ஆயுதக்குறைப்பு பற்றி இந்தியாவும் பாகிஸ்தானும் பேச்சுவார்த்தை நடாத்தலாம் என்று பாகிஸ்தான் பிரதமர் திருமதி பெனஷிர் பூட்டோ ''த நியூஸ் ட்ரெயிட் மைம்ஸ்' என்ற சஞ்சிகைக்கு அளித்துள்ள பேட்டியில் தெரிவித்துள்ளார்.

பிரதேச பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு இப்பிராந்தியத்தில் உள்ள நாடுகள் அனைத்தும் ஆயுதக்குவிப்பை தடுப்பதற்கு ஓர் உடன்பாட்டுக்கு வரவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்

சமீபகாலமாக இந்தியாவின் கடற்படைக்கு வலிமை கூட்டப்பட்டுவருகிறது. அது புதிதாக அணுவிசைநீர் மூழ்கியை வாங்கியுள்ளது 'அக்னி, ஏவுகணையை சோதனை செய்துள்ளது. இந்த நடவடிக்கைகள் தமக்கு கவலையளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எந்த ஒரு நாடும் அதன் தற்பாதுகாப்புக்கு என்னென்ன செய்யவேண்டும் என்பதை தீர்மானிக்க உரிமையுண்டு எனக்கூறிய திருமதி பூட்டோ ஒரு நாடு இராணுவ பலத்தைப் பெருக்கினால் அதனைப் பார்த்து ஏனைய நாடுகளும் ஆயுதப்பெருக்கத்தில் ஈடுபடுகின்றன இதனால் ஆயுதப் போட்டியும் பிரச்சினைகளும் தோன்றுகின்றன என்றார்.

முன்னாள் ஜனாதிபதி ஸியாவுல்ஹக் இந்தப் பேச்சுவார்த்தைக்கு முன்னர் ஏற்பாடு செய்ததாகவும் அதனைத் தொடர்ந்து தான் இதனை மேற்கொள்ளப்போவதாகவும் அவர் மேலும் சொன்னார்.

## விஸ்வஹிந்து பரிச செயலர் தகவல்
# ஆயோத்திநகரில் நவ. 9-ல் ராமர் ஆலய அடிக்கல் விழா

(சென்னை)

அடுத்த மாதம் 9ம் திகதி அயோத்தி நகரில் ராமர் கோயிலுக்கு அடிக்கல் நாட்டும் வைபவத்தைக் கைவிடுமாறு விஸ்வ ஹிந்து பரிசத்துக்கு பல பிரமுகர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை திட்டமிட்டபடி இந்த வைபவம் நடைபெறும் என விஸ்வ ஹிந்து பரிச பொதுச்செயலாளர் அசோக் சிங்கால் அலகபாத்தில தெரிவித்தார்.

இதற்காக எந்த மசூதியையும் இடிக்கப்போவதில்லை எனவும், இம்முயற்சியைத் தடுக்க அரசு முயன்றால் கிளர்ச்சியும், போராட்டமும் டம் பெறும் எனவும் அவர் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்டுள்ளது

'ராமர் ஆலயம் அமைவதற்கு பல முஸ்லிம்கள் ஆதரவு தந்துள்ளனர் என்றும் அயோத்தியில் முஸ்லிம்களின் பள்ளிவாசல் அகற்றப்படுவதை தாம் விரும்பவில்லை என்றும் அதற்காக அவர்களுக்கு வேறொரு இடம் அளிக்கப்படவேண்டும் என்றும் இந்த அமைப்பின் இணைப் பொதுச்செயலாளர் கிரிராஜ் கிஷோர் தெரிவித்துள்ளார்

## அடுத்த ஆண்டு மார்ச்சில்
# நியூஸிலாந்தில் கிரிக்கெட் போட்டி

(விளையாட்டு நிருபர்)

நியூசிலாந்தின் தலைசிறந்த, சகலதுறை கிரிக்கெட் வீரர் ரிச்சார்ட் ஹட்லி, கிரிக்கெட் உலகில் இருந்து ஓய்வுபெறப் போவதாக அறிவித்துள்ளார்.

கிரிக்கெட் உலகிற்கும் விசேடமாய் நியூசிலாந்துவிளையாட்டுத்துறைக்கும் அவர் ஆற்றிய சேவையை கௌரவிக்கும் வகையில் அடுத்த ஆண்டு நியூசிலந்து அரசு கிரிக்கெட் போட்டிகளை நடத்த ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

இப்போட்டிகளில் நியூசிலாந்தின் முன்னணி வீரர்களைக்கொண்ட அணி சர்வதேச கிரிக்கெட் அணியுடன் ஆட்டங்களில் ஈடுபடும்,

இப்போட்டித் தொடரில் முதல், ஆட்டம்மார்ச் மாதம் 25ஆம் திகதி கிறைஸ் சேச்சிலும், இரண்டாவது ஆட்டம் மார்ச் 28ஆம் திகதி ஆக்லாந்திலும், மூன்றாவது ஆட்டம் ஏப்பிரல் முதலாம் திகதியுமாக, மூன்று ஒரு நாள் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் பந்தயங்கள் நடைபெறும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

21 வீரர்களைக் கொண்ட சர்வதேச கிரிக்கெட் அணியில் ஆட இந்தியாவைச் சேர்ந்த கபில்தேவ், ரவி சாஸ்திரி. பாகிஸ்தானின் இம்ரான் கான், மியான்டாட் ஆஸ்திரேலியாவின் அலன் போடர் டேவிட்பூன் மேற்கிந்திய தீவுகளின் கிளைவ் ரொயிட்,மைக்கல் ஹோல்டிங் மற்றும் இந்தியாவின்சுனில்கவஸ்கர் ஆகிய திறமையும் புகழும் கொண்ட வீரர்கள் இதுவரையில் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆட்டங்களுக்கு மேலும் பல ஆங்கில மற்றும் மேற்கிந்திய வீரர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். ஆனால் எதிர்வரும் ஆண்டு மேற்கிந்திய தீவுகளில இங்கிலாந்து கிரிக்கெட் அணி சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொள்ள இருப்பதினால் விவியன் ரிச்சர்ட், கிரஹம் கூச் போன்ற வீரர்கள் இந்த அழைப்பை ஏற்றுக்கொள்ள இயலாமைக்கு வருத்தம் தெரிவித்துள்ளனர்.

# தென்னாபிரிக்க அரசுக்கு எதிராக தடைவிதிப்பு
## இனஒதுக்கல் கொள்கையைக் கண்டித்து கோலாலம்பூர் மாநாட்டில் பிரேரணை

(கோலாலம்பூர்)

49 நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ளும் பொதுநலவாய அமைப்பு நாடுகளின் மகாநாட்டில் தென்னாபிரிக்க மீதான காட்டமான விவாதங்கள் நடைபெற்றன. தென்னாபிரிக்கா பற்றிய விவாதம் 8 வெளியுறவு அமைச்சர்கள் தயாரித்தளித்துள்ள அறிக்கையின் அடிப்படையிலேயே நடைபெறுகிறது.

இன ஒதுக்கல் கொள்கைக்கு ஒரு முடிவு கட்டுவதற்காக பேச்சுவார்த்தை நடத்த வரும்படி தென்னாபிரிக்காவைக் கட்டாயப்படுத்துவதற்கு 30 அம்ச தடைவிதிப்புத் திட்டம் ஒன்றை இக்குழு பிரேரித்திருக்கிறது.

தென்னாபிரிக்க பிரச்சினையில் இங்கிலாந்துப் பிரதமர் மாக்கிரட் தட்சருக்கும் மற்ற தலைவர்களுக்குமிடையேயான கருத்து வேறுபாடு மீண்டும் வெளிப்பட்டிருக்கிறது. தென்னாபிரிக்காவுக்கு எதிரான தடை விதிப்புகளுக்கும், வங்கிக் கடன் முடக்கத்திற்கும் தட்சர் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறார்.

இதேவேளை, மாநாட்டின் தலைவரும், மலேசியப் பிரதமருமான டாக்டர் மொகதீர் முகம்மது தலைமையில் நடைபெற்ற பொதுநலவாய அமைப்பின் தலைமைச் செயலாளர் தேர்தலில் நைஜீரியாவைச் சேர்ந்த எவேகா அனியாங்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

எதிர்த்துப் போட்டியிட்ட அவுஸ்திரேலியப் பிரதமர் மல்கம் ஃபிறேஷரை விட அதிக வாக்குகள் பெற்று, எவேகா அனியாங்கு தலைமைச் செயலாளராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இதற்கு முன்பு ஜோர்டான் நாட்டைச் சேர்ந்த சிறீதர் ரம்பால் இந்தப் பதவியில் இருந்து வந்தது தெரிந்ததே.

# நவம்பர் மாதம் பூமியில் விண்கலம் விழப்போகிறது

(புளோரிடா)

பூமியை தற்போது வலம் வந்துகொண்டிருக்கும் 'சோலார்ஸ் மேக்ஸ்' என்ற விண்கலம் அடுத்த மாதம் பூமியில் நொருங்கி விழப்போவதாக அமெரிக்க விண்வெளி ஆய்வு மையத்தைச் சேர்ந்த (நாசா) அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ஒவ்வொன்றும் 120 றாத்தல் நிறை கொண்ட மூன்று பெரும் துண்டுகளாக இக்கலம் பூமியில் விழும் என்றும் பூமியில் விழுவதால் ஆபத்து ஏற்படும் வாய்ப்புக்கள் குறைவு என்றும் குறிப்பிட்டார். இந்த விண்கலத்தைவிட பலமடங்கு பெரிதான ''ஸ்கைலாப்'' 1979ல் பூமியில் விழுந்ததும் அதன் சிதறல்களும் இந்து சமுத்திரம். மேற்கு அவுஸ்திரேலியா பகுதியில் விழுந்ததும் குறிப்பிடத்தக்கது.

## கிரிக்கெட்
# இலங்கை அணி வெற்றி

(புதுடில்லி)

'நேரு வெற்றிக் கிண்ண' சாம்பியன் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி மே. இந்திய அணியை நான்கு அதிகப்படியான விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது

முதலில் துடுப்பெடுத்தாடிய மே. இந்தியக் கோஷ்டி ஒன்பது விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 176 ஓட்டங்களைப் பெற்றது.

இலங்கை கோஷ்டி 6 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 179 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் மே. இந்திய அணியை இலங்கை வெற்றி பெற்றது இதுவே முதற்தடவை.

# விமான விபத்து 57 பேர் பலி

(மாஸ்கோ)

சோவியத் யூனியனில் இடம் பெற்ற விமான விபத்து ஒன்றில் ஐம்பத்திஏழு பேர் உயிரிழந்தனர். இராணுவத்தினர் சென்ற விமானம் விழுந்து நொருங்கியதாலேயே இந்த விபத்து இடம்பெற்றது.

# அமைதி இல்லாத காரணம் கண்டுபிடிக்க ஆணைக்குழு

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள குழப்பமான நிலைமைக்கு இளைஞர்கள் அமைதி இல்லாத மனோநிலையில் இருப்பதே காரணமென்று இலங்கை மத்திய அரசாங்கம் கருதுகிறது.

இளைஞர்கள் ஏன் அமைதி இல்லாதவர்களாக இருக்கிறார்கள்? இதற்கான காரணம் என்ன? என்பதனை கண்டுபிடித்து அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்தால் நாட்டில் நிம்மதி ஏற்படும் என தற்போதைய அரசாங்கம் நம்புகிறது

எனவே, இளைஞர்கள் மன அமைதியில்லாமல் இருப்பதற்கான காரணங்களை அறிய ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

பேராதனைப் பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் திரு. லக்ஷ்மன் ஜெயத்திலகா தலைமையிலான இக்குழுவில் செல்வி ராதிகா குமாரசாமி, கொழும்பு பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் ஜி. எம். பீரிஸ், இலங்கை வங்கி பிராந்திய முகாமையாளர் ஜனாப் அலி முகமது, பத்திரிகையாளர் திரு. சவீந்தி பெர்ணாண்டோ, கல்லூரி அதிபர் ஆர். ஐ. டி. அலஸ், திருமதி மெனிக்கே வேன் பத்திரானா ஆகியோர் அங்கம் வகிக்கிறார்கள்.

மத ஸ்தாபனங்கள், தனிஆட்கள்இக்குழுவில் தமதுகருத்துக்களைத் தெரிவிக்கலாம்.

மூன்று மாதகாலத்தின் பின் இக்குழு தனது அறிக்கையை ஜனாதிபதிக்கு கையளிக்கும்.

கல்வி, வேலைவாய்ப்பு, உணவு, வீடு, சுகாதாரம் போன்ற அடிப்படை வசதிகளைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையிலேயே இளைஞர்கள் விரக்தி அடைந்து கொள்கிறார்கள் என்றும் இது பின்னர் அவர்களிடையே அமைதியின்மையை ஏற்படுத்துவதாகவும்பொருளாதார வல்லுனர்கள் தெரிவிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# எம். ஜி. ஆர் முத்திரை

(புதுடில்லி)

எம் ஜி ஆரின் உருவம் பொறித்த தபால் முத்திரையை இந்திய மத்திய அரசு வெளியிடவுள்ளது

தமிழகத்தின் முன்னாள் முதல்வர் எம். ஜி. இராமச்சந்திரனின் உருவம்பொறித்த முத்திரை அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 17ந் திகதி அவரது பிறந்த நாளன்று வெளியிடப்படும் மத்திய தபால் துறை தலை வெளியீட்டுப் பிரிவினர் இதனை அறிவித்துள்ளனர்.

## பல்கலைக்கழக

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வுட்' புள்ளி விபரங்கள் வெளியிடப்படுமெனவும் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

புதிய மாணவர்களைத் தெரிவுசெய்வதற்கான நடவடிக்கைகள் நிறுத்திவைக்கப் பட்டுள்ளதாக வெளியான செய்தி தவறானது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முதலாம் திகதி முதல்
# ரயில் பாதுகாப்புக் கதவுகள் இரவு நேரத்திலும் இயங்கும்

(யாழ்ப்பாணம்)

அடுத்தமாதம் முதலாம் திகதியிலிருந்து யாழ். மாவட்டத்திலுள்ள சகல ரயில்வே கடவைகளிலும் இரவுநேரத்தில் பாதுகாப்பு காவலாளிகளின் சேவை வழங்கப்படவுள்ளது.

தற்பொழுது இங்குள்ள பாதுகாப்புக்கதவுகளிலும் மூங்கில்க்கடவைகளிலும்பகல் நேரத்தில் மட்டுமே பாதுகாப்புக் காவலாளிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

இரவுநேரத்தில் சரக்கு ரயில சேவையையும், மற்றும் ரயில்சேவையையும் நடாத்துவதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளதையடுத்தே இரவு நேரத்தில் பாதுகாப்புக் கதவுகளை இயக்குவதற்கு புகையிரதப்பகுதி நடவடிக்கை எடுத்துள்ளது

## அகில இலங்கை ரீதியில்
# கட்டுரைப் போட்டியில் மன்னாருக்கு முதலிடம்

(மன்னார்)

இலங்கை வங்கியினால் ஐம்பதாவது ஆண்டு நிறைவையொட்டி அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட கட்டுரை போட்டியில் தமிழ் பிரிவில் மன்னார் அல் அசார் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவி செல்வி எச் எம். ஷர்மிளா முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

மட்டக்களப்பு காத்தான் குடி மீலாத் மகளிர் பாடசாலையைச் சேர்ந்த செல்வி ஓ. எல். சல்பா மசூதா இரண்டாமிடத்தையும், கிளிநொச்சி தர்மபுரம் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த பெருமாள் கணேசமூர்த்தி மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளனர்.

இம்மூவருக்கும் முறையே 1600/-' 1000/-, 500/- ரொக்கப்பணப் பரிசுகளுடன் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலை

## தொண்டர் ஆசிரியர் பிரச்சனே

கல்வித் துறையைப் பொறுத்தளவில் வடக்குக் கிழக்கில் வசதிக் கட்டண ஆசிரியர்களின் பிரச்னே இன்று சகலரினதும் கவனத்தை ஈர்த்துள்ளது.

வசதிக் கடடண ஆசிரியர்களாக ஆண்களிலும் பாக்க பெண்களே அதிகமாக கடமையாற்றிவருவதும் குறிப்பிடத்தக்கது. பலர் ஐந்து வருடங்களுக்கும் மேலாக மிகக் குறைந்த அதாவது நூறு ரூபா தொடக்கம் இரு நூற்றி ஐம்பது ரூபா வரையான உதவித் தொகையையே பெற்று வருகின்றனர் இப்பணம் கூட மாணவர்கள் பாடசாலேக்காகச் செலுத்தும் வசதிக்கட்டணத்திலிருந்தே வழங்கப்படுவதும் குறிய்பிடத்தக்கது.

இவ்வாறு வழங்கப்படும் சொற்பதொகை இன்றைய விலேவாசியோடு ஒப்பிட்டால் ஒரு காற்சடடையோ அல்லது சேலேயையோகூடவாங்கப் போதாது என்பதை சகலரும் ஏற்றுக் கொள்வர். தமது வசிப்பிடங்களுக்கு அருகேயுள்ள பாடசாலேகளிலேயே கல்வி கற்பிக்கும் இவ்வாசிரியர்கள், கல்வி இலாகாவின் அனுமதியோடும் பாடசாலே அபிவிருத்திச் சங்கத்தின் அங்கீகாரத்தோடுமே இவர்கள் நியமனம் செய்யப்படடனர். ஆனல் நியமனம் வழங்கியதோடு கல்வி இலாகா அவர்களேப் பற்றிச் சிந்திப்பது கிடையாது சம்பந்தப்பட்ட பாடசாலேகளின் அதிபர்களும் ஆசிரியர்களும் மடடுமன்றி, கல்வி பயிலும் மாணவர்களின் பெற்றேர்களும் கூட அவர்களின்எதிர்காலம் பற்றிச் சிந்திப்பது இல்லே.

வசதிக்கடடணத்தில் கடமையாற்றும் ஆசிரியர்கள் தமது கடமைகளில் கண்ணும் கருத்துமாக செவ்வனே நிறைவேற்றி வருகின்றனர் சில பாடசாலேகளில் நிரந்தர ஆசிரியர்களேவிட மிகுந்த பொறுப்புணர்வோடு சேவையாற்றுவதையும் காண முடிகின்றது. இதனல் மாணவர்களின் அன்புக்கும், மதிப்புக்கும் உரியவர்களாகின்றனர்

பல பெரிய கல்லூரிகளிளில் லீவு காரணமாக வருகை தராத ஆசிரியர்களின் பாடங்களேக்கூட நேர சூசிக்கேற்பவும், இவர்களே கவனித்து வருவதும் கண்கூடு. இவர்களின் கடமையுணர்வையும், சேவை மனப்பான்மையையும் பாடசாலே அதிபர்களும், பெற்றேர்களும்கூட பல்வேறு சந்தர்ப்பங்களில் மனம் திறந்து பாராட்டியுள்ளனர். இவ்ஆசிரியர்களும் எதிர்கால மாணவர்களின் நலன் கருதி சேவையாற்றுகின்றேம் என்னும் ஆத்ம திருப்தியோடு கடமையாற்றினுலும் இவர்களது பொருளாதாரத் தேவைகளேப் பூர்த்தி செய்வதற்கும் உரிய இடங்களில் கவனமெடுக்கப்படவேண்டும். மக்களும் சமூகமும், கல்வித் துறையோடு சம்பந்தப்பட்டவர்களும் இவர்களே கைதூக்கி விடுவதில் தமக்கும் பெரும் பங்கு உண்டு என்பதை நினேவிலிருத்திக் கொள்ள வேண்டும்.

இதேசமயம் ஒரு சில பாடசாலே அதிபர்கள் தமது பிள்ளேகளேயும் உறவினர்களேயும் வேண்டிய தராதரம் இல்லாமலிருந்த போதிலும் இத்தகைய ஆசிரியர்களின் வெற்றிடங்களுக்கு நியமனம் செய்திருக்கின்றுர்கள் என்பதையும் மறுப்பதற்கில்லே. ஆனல், ஒருசில பாடசாலேகளில் நிலவும் இத்தகைய முறைகேடுகளுக்காக முழு வசதிக்கட்டண ஆசிரியர்களேயும் புறக்கணிப்பது எந்த வகையிலும் நீதியாகாது.

மத்திய அரசு சகல துறைகளிலும் அதிகாரப் பரவலாக்கலே செய்வதாகப் பேச்சளவில் கூறிக்கொண்டு, நடைமுறையில் வடக்குக் கிழக்கில் புதிய ஆசிரிய நியமனங்கள் செய்ய முனேவதும், இதன்பின்னல் அரசின் கங்காணிகளாக நின்று, ஆசிரியர்களின் தொழிற்சங்க வாதி என்னும் 'லேபலுடன்' ஆசிரிய நியமனங்களுக்காக ஆயிரக்கணக்கான ரூபாய்களே வாரிச்சுருட்டிக் கொள்வதை இனியும் அனுமதிக்க வேண்டுமா?

இத்தகைய ஆசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பித்து நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றியும், வேண்டிய பணத்தை 'தரகர்களுக்கு கொடுக்கமுடியாத காரணத்தினுலேயே இவர்கள் தொடர்ந்தும் வசதிக் கட்டணத்தில் கடமையாற்றுகின்றுர்கள் என்பதை சகல தரப்பினரும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

கடந்த காலங்களிலும் பார்க்க தற்போது இவ்வாசிரியர்கள் தம்மை ஸ்தாபனமயப்படுத்திக் கொண்டு, தமது பிரச்னேகளே சகலரினதும் கவனத்துக்குக் கொண்டுவர முற்பட்டுள்ளது நல்ல அறிகுறியாகும் தங்கள் சங்கத்தின் மூலம் அரச அதிகாரிகளுக்கு நிர்ப்பந்தத்தை உருவாக்க முன்வரவேண்டும்.

ஆகவே வடக்கு கிழக்கு மாகாண அரசும், அதன் மாகாணக் கல்வி அமைச்சும், இவ்வாசிரியர்களின் பிரச்சினேகளே மிகுந்த அனுதாபத்துடன் நோக்கி, கூடிய விரைவில் பரிகாரம் காண முயலவேண்டும். அதே சமயம் வடக்கு கிழக்கிலுள்ள மாகாண சபை உறுப்பினர்களும் தமது மாவடடங்களில் கடமையாற்றும் வசதிக்கடடண ஆசிரியர்களே தராதரத்துக்கேற்பவும், சேவையாற்றிய காலத்தின் அடிப்படையிலும், இவர்களுக்கு நிரந்தர நியமனங்களேப் பெற்றுக்கொடுத்து, அவர்களின் தொண்டு மனப்பான்மைக்கு மதிப்பளிக்க முன்வரவேண்டும்.

## 1 கிலோ மா 10 ரூபா 40 சதம்

(யாழ்ப்பாணம்)

ஒரு கிலோ மாவின் கட்டுப்பாட்டுவிலே 10 ரூபா 40 சதம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் காகேசன் துறைக் களஞ்சியத்திலிருந்து 'மா' வைப் பெற்றுக் கொள்ளுகின்றன. என்றும் அவை ஒருகிலோ மாவை 10 ரூபா 75 சதம் முதல் 11 ரூபா வரை விற்பனே செய்வதாகத் தெரிய வருகிறது.

600 மெற்றிக் தொன் மா கப்பலில் காங்கேசன் துறை துறைமுகத்துக்கு வந்து சேர்ந்துள்ளது.

### ஜனுதிபதி பிரேமதாஸ அதிகாரிகளுக்கு உத்தரவு

# அத்தியாவசிய பொருட்கள் 3 மாதம் கையிருப்பில் இருக்கவேண்டும்!

(கொழும்பு)

அத்தியாவசியப் பொருட்களே கொள்வனவு செய்து வழங்கும் திணேக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் இனிமேல் மூன்று மாதக் காலத்துக்குரிய பொருகளே கையிருப்பில் வைத்திருக்கவேண்டும் என ஜனுதிபதி திரு. ஆர். பிரேமதாச உத்தரவு பிறப்பித்துள்ளார்

அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படுவது, விலே ஏற்றுவது போன்றவற்றில் சில வர்த்தகர்கள் ஈடுபடுவதால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜனுதிபதி செயலகத்தில் இவற்றின் தலேவர்கள் மாநாடு நடைபெற்றபோதே ஜனுதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்தார். இதுபற்றிய இணேப்புக்குழுக் கூட்டம் வாராந்தம் நடைபெறுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

பால், முட்டை, அரிசி, சீனி, வெங்காயம், மா, கறிவகைகள், பாடசாலேப் பிள்ளேகளின் கொப்பிகள், சீருடைகள், மருந்து வகைகள், என்பவற்றின் தற்போதைய கையிருப்பு பற்றியும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

அரிசி, மா போன்றவை மூன்று மாதக் காலத்துக்கு தேவையாக இருப்பதாகவும் இங்கு ஜனுதிபதியிடம் தெரிவிக்கப்பட்டது திருகோணமலேயிலிருந்து ஏனேய இடங்களுக்கு மா அனுப்புவதில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் பற்றியும் விபரிக்கப்பட்டது.

சீனி இரண்டு மாதங்களுக்கும் பருப்பு மூன்று மாதக் காலத்திற்கும் கையிருப்பில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மருந்துவகைகள் இந்தியாவிலிருந்து வருவது தடைப்பட்டால் அவற்றுக்கு விலே அதிகரித்துள்ளதாகவும் சுட்டிக் காட்டப்பட்டது.

### பாராளுமன்றத்தில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இளேஞர்கள் மத்தியில் அமைதியின்மை தோன்றிய தற்கான காரணங்களே அறிய நியமிக்கப்பட்ட விசேட ஆணேக்குழு தற்போதைய நிலேமையில் மிகவும் அவசியம் எனவும் இதன் செயற்பாடுகள் துரிதப்படுத்தவேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசிய அவர், கொலேகளேயும் வேறு குற்றங்களேயும் செய்வதன்மூலம் பிரச்சனேகளுக்கு தீர்வு காண முடியாது. வேலே வாய்ப்பின்மை, காணிப்பிரச்னே. பொருளாதாரப்பிரச்சனே என்பனவே தற்போதைய நெருக்கடிக்கு முக்கிய காரணங்களாகும் என்றுர்.

### அம்பாறையிலிருந்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யினர் விலக்கிக்கொள்ளப்படவேண்டும், என வடக்கு, கிழக்கு முதலமைச்சர் அ. வரதராஜப்பெருமாள் குறிப்பிட்டிருந்தது தெரிந்ததே ஜனுதிபதியும் முதலமைச்சரும் கேட்டுக்கொண்டால் மட்டுமே, இப்போது விலக்கிக் கொள்ளப்படும் விசேட அதிரடிப் படையினர் தேவைப்பட்டால் திருப்பி அழைக்கப்படுவார்களென விஜயரத்ன கூறினர்

அம்பாறை மாவட்டத்தில் ஏற்கனவே 5000க்கும் மேற்பட்ட பொலிஸ் படையினர் உள்ளனர். அவர்கள் தேசிய பொலிஸ் படையில் நீடிக்க விரும்புகிறுர்களா என்று தெரிந்து கொண்டதன் பின்னர், இனவிகிதாசார அடிப்படையில் ஆங்காங்கு சேவையில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

முதலமைச்சரின் கீழ் இயங்கும் மாகாண பொலிஸ்படை அமைக்கும் வரைக்குமான இடைக்கால ஏற்பாடாகவே குடிமக்கள் தொண்டர்படை செயற்படுகிறது. தேசிய பொலிஸ் ஆணேக்குழு, மாகாண பொலிஸ் ஆணேக்குழு என இரு பொலிஸ் படைகள் அமைக்கப்பட்ட பின் குடிமக்கள் தொண்டர் படை மாகாண பொலிஸ் படைக்குள் அடங்கிவிடும் என்றும் அவர் கூறினர்.

முதலமைச்சரின் கட்டுப்பாட்டில் இயங்கும் மாகாண பொலிஸ் படை சேவையில் ஈடுபட ஆரம்பித்த பின்னர் எந்தவிதத் தனியார் குழுக்களின் ஆயுதப் படைகளும் செயற்பட முடியாது எனக் கூறிய திரு. ரஞ்சன் விஜயரத்ன, மாகாண பொலிஸ் படை ஒன்றை அமைப்பதற்கான ஒரு சட்டம் நவம்பர் மாதம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் என்றும் தெரிவித்தார்.

## ஆசிரிய இடமாற்ற விண்ணப்ப முடிவு திகதி நீடிப்பு?

(கொழும்பு)

அடுத்த வருடத்துக்கான ஆசிரிய இடமாற்ற விண்ணப்பத் திகதி நீடிக்கப்படலாம் எனத் தெரியவருகின்றது.

ஒரு குறிப்பிட்ட மாகாணத்துக்குள் இடமாற்றம் கோரி விண்ணப்பிக்கும் ஆசிரியர்களின் விண்ணப்பங்களே இம்மாதம் 31ம் திகதி வரை ஏற்றுக்கொள்ளும்படி கல்விச் சேவை ஆணேக்குழு மாகாண கல்விப் பணிப்பாளர்களேக் கேட்டுள்ளது.

வெளி மாகாணங்களுக்கு இடமாற்றம் கோரி விண்ணப்பிக்கும் ஆசிரியர்களின் விண்ணப்பப் படிவங்களும் தாமதமாகக் கிடைத்தால் அவை ஏற்றுக்கொள்ளப்படும் எனவும் அறியவருகின்றது.

நாட்டின் தற்போதைய சூழ்நிலே காரணமாகவே இந்தச் சலுகையை வழங்க ஆலோசிக்கப்பட்டுள்ளது.

## 'சாஜா' போட்டியில் பாகிஸ்தானுக்கு வெற்றி!

(சாஜா)

மூன்று நாடுகளுக்கிடையில் நடந்த 'சாஜா வெற்றிக் கிண்ணத்துக்கான' கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணி மகத்தான வெற்றி பெற்று, சாம்பியன் கிண்ணத்தைத் தட்டிச் சென்றுள்ளது.

நேற்று நடைபெற்ற போட்டியில் இந்திய அணியைத் தோல்வியடையச் செய்ததன் மூலம், பாகிஸ்தான் கலந்து கொண்ட நான்கு போட்டிகளிலுமே வெற்றி பெற்றுச் சாதனேபடைத்துள்ளது

பாகிஸ்தான், இந்தியா, மே. இந்தியத் தீவுகள் ஆகிய அணிகள் கலந்து கொண்ட இப்போட்டியில், இந்தியாவும் மே இந்தியாவும் தலா ஒவ்வொரு போட்டிகளில் வெற்றி பெற்றன.

### இன்று 2ம் ஆண்டு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நோயாளர் பிரிவில் தூபிகட்டுவதற்கு சென்ற வருடம் அடிக்கல் நாட்டப்பட்டது. ஆனல் அவ்வேலே மேற்கொண்டு நடைபெறவில்லே என்பது குறிப்பிடத்தக்கது.

### சமாதானக் குழு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பங்கு கொள்ள மறுத்தமையேயாகும். அமைதியைக் குழப்புபவர்கள் பங்குபற்றுமையால் அதனேப் பின்போட்ட நீங்கள் அதே அடிப்படையில் சர்வகட்சி மாநாட்டையுமல்லவா பின் போட்டிருக்கவேண்டும். நீங்கள் எப்படியும் வடக்கு, கிழக்கில் அமைதியற்ற ஒரு நிலேயை உருவாக்கவேண்டுமென்ற நிலேயில் இயங்கிவருகின்றீர்கள்

புனேயில் ஸ்ரீலங்கா இராணுவத்துடன் சேர்ந்துநின்று ஒருகுழுவினர் நடாத்தும் அடாவடிச் செயல்கள் பற்றி பலமுறை இந்தச் சபையில் சொல்லப்பட்டது ஆனல் தற்போது அது மேலும் வளர்ச்சியடைந்து கடத்தப்பட்ட வாகனங்களே இந்த இராணுவ முகாமில் மீட்கக்கூடியநிலே ஏற்பட்டுள்ளது.

உங்களது இந்தக் குள்ளத்தனத்தினுல் இந்த நாடு தனது முழு நிலப்பரப்பின் மூன்றிலொரு பகுதியை இழந்து நிற்கப்போகின்றது என்பதை நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

### எழுத்தாளர்கள்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இதன்படி, மாகாண சபையினுல் தெரிவாக்கப்பட்ட 'கலே இலக்கிய குழு' முதல் நடவடிக்கையாக தமிழில் வெளியிடப்படும் நூல்களில் குறிப்பிடத்தக்க பிரதிகளே வாங்குவதற்கும் பிரசுர வசதியின்றிச் சிரமங்களே எதிர்நோக்கும் எழுத்தாளர்களின் படைப்புகளே வெளிக்கொணர்வதற்கும் வேண்டிய உதவிகளே மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளது.

தரமான படைப்புகளுக்குப் பரிசு வழங்கும் திட்டமும் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

எழுத்தாளர்களும், நூல் வெளியீட்டாளர்களும் அண்மையில் வெளியிடப்பட்ட புத்தக விபரங்களுடனும், வெளியீட்டு வசதியற்றிருக்கும் படைப்புகள் பற்றிய விபரங்களுடனும் தொடர்பு கொள்ளும்படி மாகாண கலே இலக்கிய குழுவினர் கேட்டுக்கொண்டுள்ளனர் மேலதிக விபரங்களுக்கு வடக்கு கிழக்கு மாகாண அரசு கலே இலக்கிய கலாச்சாரக் குழு, பேரவைச் செயலகம், திருகோணமலே என்னும் முகவரிக்கு தொடர்பு கொள்ளலாம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், இல. 6, மகாத்மா காந்தி வீதி நவயுக வெளியீட்டு நிறுவனத்தாரால் மேற்படி முகவரியில் உள்ள விடுதலே அச்சகத்தில் அச்சிடப்பட்டு 21-10-1989ல் வெளியிடப்பட்டது

தொலேபேசி 291

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org